# ஆதியிலே என்னும் ஆரம்பச் சொல்லின் அர்த்தங்கள்

**வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்**

வேதாகம சத்தியங்களை சரியான விதத்தில் அறிந்துகொள்வதற்கு, வேதாகமச் சொற்களின் சரியான அர்த்தத்தை அறிந்திருக்க வேண்டியது அவசியமாய் உள்ளது. ஏனெனில், வேதாகமம் தமிழில் அல்ல, பழைய ஏற்பாடு எபிரெய மொழியிலும், புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலுமே எழுதப்பட்டது. இதனால், நாம் வைத்திருக்கும் தமிழ் அல்லது ஆங்கில வேதாகமம் ஒரு மொழிபெயர்ப்பாக மாத்திரமே உள்ளது. மேலும், இவைகள் பல வருஷங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளாக இருப்பதினால்,[1] தற்காலத்தில் உபயோகிக்கப்படாத பழங்கால சொற்கள் பல வேதாகமத்தில் உள்ளன. அதுமாத்திரமல்ல, சில சொற்களுக்கு தற்காலத்தில் இருக்கும் அர்த்தம் வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்ட காலத்தில் இருக்கவில்லை. இதனால்தான், "அத்தியாயம்" என்பதற்கு "அதிகாரம்" என்னும் சொல் வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்ட காலத்தில் அதிகாரம் என்னும் சொல், "புத்தகத்தின் ஒரு பகுதி" என்னும் அர்த்தமுடையதாய் இருந்தது.[2] ஆனால், இன்றைக்கு ஆட்சியாளருக்கு அல்லது மேலதிகாரிக்கு இருக்கும் அதிகாரத்தைக் குறிப்பிடும் சொல்லாய் உள்ளது. இதைப்போலவே, "ஏற்பாடு" என்னும் சொல் தற்காலத்தில் "ஆயத்தம் செய்தல்" என்னும் அர்த்தமுடையதாய் இருந்தாலும், வேதாகமம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட காலத்தில் "உடன்படிக்கை" என்னும் அர்த்தமுடையதாய் இருந்தது.[3] இதைப்போலவே, பல சொற்களுக்கு தற்காலத்தில் உபயோகிக்கப்படாத வேறு அர்த்தங்களே வேதாகமத்தில் உள்ளன.

வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்ட காலத்தில் பெரும்பாலான சொற்கள் வித்தியாசமான அர்த்தமுடையவைகளாய் இருந்தது மாத்திரமல்ல, வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், அவை எழுதப்பட்ட மொழிகளிலும் வித்தியாசமான அர்த்தமுடையவைகளாகவே இருந்தன. இதனால், வேதாகமத்தை நாம் வாசிக்கும்போது சில முக்கியமான சொற்கள், அவைகள் எழுதப்பட்டபோது எத்தகைய அர்த்தத்தில் இருந்தன என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாய் உள்ளது. இல்லையென்றால், வேதாகம சத்தியங்களை நாம் தவறாகவே புரிந்துகொள்வோம். இதனால், தற்காலத்தில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஒரு முக்கியமான சொல்லை இக்கட்டுரையில் ஆராய்ந்து பார்ப்போம். இச்சொல், வேதாகமத்தின் முதல் புத்தகத்தின் முதல் சொல்லாகவும், யோவான் எழுதிய சுவிசேஷத்தின் முதல் சொல்லாகவும் உள்ளது. அதாவது, "ஆதியிலே" என்னும் சொல் இவ்விரு புத்தகங்களினதும் முதலாவது சொல்லாக உள்ளது. இதனால், இவ்விரு புத்தகங்களிலும் இச்சொல் ஒரே அர்த்தத்திலேயே இருப்பதாகக் கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். எனினும், தமிழில் இவ்விரு புத்தகங்களினதும் ஆரம்பச் சொல் ஒன்றாகவே இருந்தாலும், ஆதியாகமம் பழைய ஏற்பாட்டிலும், யோவான் புதிய ஏற்பாட்டிலும் இருப்பது மாத்திரமல்ல, பழைய ஏற்பாடு எபிரெய மொழியிலும், புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலுமே எழுதப்பட்டுள்ளதினால், மூலமொழியில் இரண்டு புத்தகங்களிலும் ஒரே சொல் அல்ல, வித்தியாசமான மொழிகளில் உள்ள சொற்கள் வித்தியாசமான அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன. இதனால், இதை அறியாத நிலையில், இரண்டு இடத்திலும் ஆதியிலே என்னும் சொல்லுக்கு ஒரே அர்த்தமே உள்ளது என்று எண்ணுகிறவர்கள், வேதாகம சத்தியத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளுகிறவர்களாகவே இருக்கின்றனர்.

ஆதியாகமத்தின் ஆரம்ப சொல்லான ஆதியிலே என்பதற்கு மூலமொழியில் "பெரிஷித்" (*beresit*) என்னும் எபிரெயச் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. தமிழில் ஆதி என்னும் சொல்லுக்கு மூலம், முதல், பழைமை, தொடக்கம், இறைவன், சூரியன், எஜமான், பிரதானம் என்று பல அர்த்தங்கள்

---

[1] வேதாகமம் எழுதப்பட்டு பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட வரலாற்றை அறிந்துகொள்வதற்கு எனது "புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு" என்னும் நூலைப் பார்க்கவும்.

[2] வ.த.இராமசுப்ரமணியம், *திருமகள் தமிழகராதி*, பக்.28.

[3] வ.த.இராமசுப்ரமணியம், *திருமகள் தமிழகராதி*, பக்.219.

இருப்பதினால்,[4] ஆதியாகமம் 1:1இல் இச்சொல் என்ன அர்த்தத்தில் உள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கு, மூலமொழியில் உள்ள சொல்லின் அர்த்தம் என்ன என்பதையும், இவ்வசனத்தில் இச்சொல் என்ன அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் "ஆரம்பம்" அல்லது "முதலில்" என்னும் அர்த்தமுடையது. எனினும், இவ்வசனத்தில் இச்சொல் சிருஷ்டிப்பினதும்,[5] காலத்தினதும் ஆரம்பத்தைக் குறிப்பிடும் சொல்லாயுள்ளது.[6] ஏனெனில், தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபோதே காலமும் நேரமும் உருவானது.[7] மேலும், முதலாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னர், தேவனைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை.[8]

சிருஷ்டித்தார் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "பாரா" (*bara*) என்னும் சொல் (எபிரெய மொழி இலக்கணத்தின்படி qal stemஇல்) சிருஷ்டிக்கப்பட்டதைக் குறிப்பிடுவதற்கு மாத்திரமே வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒன்றைச் சிருஷ்டிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களைக் குறிப்பிடுவதற்கு இச்சொல் (இலக்கண ரீதியாக qal stemஇல்) உபயோகிக்கப்படவில்லை.[9] இதனால்தான், ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் இச்சொல் 1:1, 1:21 1:27 என்னும் வசனங்களிலும், இரண்டாம் அதிகாரத்தில் 2:3இலும் 2:4இலும் மொத்தமாக ஏழு தடவைகள் மாத்திரமே உள்ளது. மேலும், பழைய ஏற்பாட்டில் 48 தடவைகள் இடம்பெறும் இச்சொல், தேவனுடைய செயலைக் குறிப்பிடுவதற்கு மாத்திரமே உபயோகிக்கப்பட்டுள்ளது.[10] ஏனெனில், தேவனால் மாத்திரமே எதையும் சிருஷ்டிக்க முடியும்.[11] எனவே, இச்சொல் ஆதியாகமம் 1:1இல் இலக்கண ரீதியாக qal stemஇல் இருப்பதினால், ஏற்கனவே இருந்த சடப்பொருளில் இருந்து தேவன் எதையும் சிருஷ்டித்தார் என்று எவ்விதத்திலும் இவ்வசனத்தை மொழிபெயர்க்க முடியாது.[12] ஏனெனில், "தேவனுடைய சிருஷ்டிப்புச் செயல், முன்பு இல்லாததை உருவாக்கியுள்ளது."[13] அதாவது, தேவன் ஒன்றுமில்லாததிலிருந்து சகலத்தையும் சிருஷ்டித்துள்

---

4 வ.த.இராமசுப்ரமணியம், *திருமகள் தமிழகராதி*, பக்.77.

5 D.Kidner, *Genesis: Tyndale Old Testament Commentary*, p. 44.

6 J.E.Hartley, *Genesis: New International Biblical Commentary*, p. 42; R.K.Hughes, *Genesis: Preaching the Word Commentary*, p. 18; G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Volume 1*, pp. 13-14; J.D.Currid, *Genesis Volume 1: Evangelical Press Study Commentary*, p. 56; C.F.Keil & F.Delitzsch, *Commentary on the Old Testament Volume 1*, p. 29.; J.H.Sailhamer, *Genesis: The Expositor's Bible Commentary Volume 2*, p. 20. H.M.Morris, *The Genesis Record: A Scientific and Devotional Commentary on the Book of Beginnings*, p. 41; V.S.Poythress, *Interpreting Eden: A Guide to Faithfully Reading and Understanding Genesis 1-3*, p. 144; A.Louth, *Ancient Christian Commentary on Scripture – Old Testament Volume 1*, p. 3.

7 J.S.Feinberg, *No One Like Him: The Doctrine of God*, p. 550.

8 H.C.Leupold, *Exposition of Genesis Volume 1*, p. 40.

9 K.A.Mathews, *Genesis 1-11: The New American Commentary*, p. 128; R.K.Hughes, *Genesis: Preaching the Word Commentary*, p. 19; G.Von Rad, *Genesis: The Old Testament Library Commentary*, p. 49; J.E.Hartley, *Genesis: New International Biblical Commentary*, p. 43; J.C.L.Gibson, *Genesis Volume 1: The Daily Study Bible Commentary*, p. 23; H.Blocher, *In the Beginning: The Opening Chapters of Genesis*, p. 61.

10 F.Brown, S.Driver, and C.Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament*, p. 135. Oxford: University Press, 1962; K.A.Mathews, *Genesis 1-11: The New American Commentary*, p. 129; J.D.Currid, *Genesis Volume 1: Evangelical Press Study Commentary*, p. 57; B.K.Waltke, *Genesis: A Commentary*, p. 59; C.Ch.Aalders, *Genesis Volume 1: Bible Student's Commentary*, p. 51; T.J.Finley, "Dimensions of the Hebrew Word for Create" in *Bibliotheca Sacra*. 148 (1991), pp. 411-412. (409-423); G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Volume 1*, p. 14; N.M.Sarna, *Genesis: The JPS Torah Commentary*, p. 5; A.E.Steinmann, *Genesis: Tyndale Old Testament Commentary*, p. 50.

11 H.M.Morris, *The Genesis Record: A Scientific and Devotional Commentary on the Book of Beginnings*, p. 40.

12 T.Longman, *Genesis: The Story of God Bible Commentary*, pp. 33-34; J.M.Boice, *Genesis 1-11: An Expositional Commentary*, p. 50; D.F.Kelly, *Creation and Change: Genesis 1:2-2:4 in the Light of Changing Scientific Paradigms*, pp. 66-67; C.J.Collins, *Genesis 1-4: A Linguistic, Literary, and Theological Commentary*, p. 67. பாரா என்னும் எபிரெயச் சொல்லுக்கு பகுத்தல், வெட்டுதல், பிரித்தல், வடிவமைத்தல், சிருஷ்டித்தல், உருவாக்குதல், பிறப்பித்தல், கட்டுதல் என்னும் பல அர்த்தங்கள் இருப்பதினால், ஏற்கனவே இருந்த சடப்பொருளை வைத்தே தேவன் பூமியை சிருஷ்டித்தார் என்று கூறமுடியாது. மேலும், ஏற்கனவே இருக்கும் சடப்பொருளை வைத்து ஒன்றை உருவாக்குவதைக் குறிப்பிடும் "ஆஸ்ஷா" என்னும் எபிரெயச் சொல்லுக்குப் பதிலாக ஒருசில வசனங்களில் இச்சொல் உபயோகிக்கப்பட்டிருப்பதினால், ஆதியாகமம் 1:1இல் இச்சொல் ஏற்கனவே இருந்த சடப்பொருளை வைத்தே தேவன் பூமியை சிருஷ்டித்தார் என்றும் கூறமுடியாது. ஏனெனில், இச்சொல் ஆதியாகமம் 1:1இல் எபிரெய மொழி இலக்கணத்தின்படி qal stemஇலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.

13 C.Ch.Aalders, *Genesis Volume 1: Bible Student's Commentary*, p. 52.

ளார். கிறிஸ்தவ இறையியலில் இது Creation out of nothing என்று குறிப்பிடப்படுகிறது. ஏனெனில், அவர் "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவராய்" இருக்கின்றார் (ரோ.4:17).[14] அதாவது, ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் "உண்டாகக்கடவது" என்று அவர் சொல்லும்போது, அதுவரையில் இல்லாததொன்று உருவாகியது என்பதையே ரோமர் 4:17இல் பவுல் சுட்டிக்காட்டுகிறார்.[15] இதனால்தான், ஏற்கனவே இருந்த சடப்பொருளை வைத்து அல்ல, ஒன்றுமில்லாததிலிருந்து தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்று வேதாகமம் கூறுகிறது.[16]

ஆதியாகமம் 1:1இன் சரியான அர்த்தத்தை எபிரேயர் 11:3 சிறப்பான விதத்தில் அறியத்தருகின்றது. இதனால்தான், "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படு கிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்" என்று இவ்வசனம் கூறுகிறது. அதாவது, இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் இவ்வசனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ள விதமாக, "கண்ணுக்குப் புலப்படுகிறவைகள் கண்ணுக்குப் புலப்படுபனவற்றிலிருந்து உண்டாக்கப்பட வில்லை." அதாவது, "காணப்படாதவற்றினின்று காணப்படுகின்றவை உண்டாயின."[17] எனவே, ஆதியாகமம் 1:1ஐ எபிரெயர் 11:3உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தேவன் நேரடியாகத் தம்முடைய வார்த்தையின் மூலம், அதாவது பேச்சின் மூலம், அதுவரையில் இல்லாதவைகளை சிருஷ்டித்துள்ளார் என்பதையும், ஏற்கனவே இருந்த சடப்பொருளில் இருந்து பூமியை அவர் உருவாக்கவில்லை என்பதையும் அறிந்துகொள்ளக் கூடியதாய் உள்ளது.[18] ஏனெனில், "தேவனுடைய சிருஷ்டிப்பின் செயலுக்கு முன்பு அவரைத்தவிர வேறு எதுவும் இருந்ததற்கு ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை."[19] இதனால்தான், சங்கீதக்காரன் இதைப்பற்றி எழுதும்போது, "பர்வதங்கள் தோன்று முன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்" (சங்.90:2) என்று குறிப்பிட்டுள்ளான். உண்மையில், தேவன் நித்தியமானவராக இருப்பதினால் எவ்வித ஆரம்பமும் அற்றவராக இருக்கின்றார். எனவே, காலவரையறை எதுவும் இல்லாத நித்தியமான தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபோதே "காலமும் அண்டவெளியும் சடப்பொருளும் உருவாகியது."[20] இதனால், ஆதியாகமம் 1:1இல், "ஆதியிலே என்னும் சொல் குறிப்பிட்ட ஒரு காலத்தின் ஆரம்பத்தை, அதாவது, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட காலத்தின் ஆரம்பத்தைக் குறிப்பிடும் விதத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, தேவனுடைய சிருஷ்டிப்புச் செயல் ஆறு நாட்களாக நடைபெற்றதினால், இதன் ஆரம்பமே ஆதியாகமம் 1:1இல் ஆதியிலே என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதியாகமம் 1:1இல் ஆதியிலே என்னும் சொல் ஆரம்பம் என்னும் அர்த்தமுடையதாக இருந்தாலும், யோவான் 1:1இல் ஆதியிலே என்னும் சொல் இத்தகைய அர்த்தமுடையது அல்ல. மேலும், ஆதியாகமம் 1:1இன் அர்த்தத்தின்படி யோவான் 1:1ஐ புரிந்துகொண்டால், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய தவறான எண்ணமுடையவர்களாகவே இருப்போம். ஏனெனில், யோவான் 1:1இல் "ஆதியிலே வார்த்தை இருந்தது" என்னும் வாக்கியத்தில், வார்த்தை இயேசுகிறிஸ்து என்பதை 14ஆம் வசனம் அறியத்தருகின்றது. எனவே, "ஆதியிலே வார்த்தை இருந்தது" என்னும் வாக்கியத்தில் "ஆதியிலே" என்பதற்கு ஆதியாகமம் 1:1ஐப்போல ஆரம்பம் என்னும் அர்த்தத்தைக் கொடுத்தால், இயேசுகிறிஸ்துவை ஆரம்பம் உள்ள ஒருவராகவே தவறாகப் புரிந்து கொள்ளுவோம். ஆனால், இயேசுகிறிஸ்து, எவ்வித ஆரம்பமும் அற்ற நித்தியராக இருக்கின்றார் என்றே வேதாகமம் கூறுகிறது.[21] இதனால், யோவான் 1:1இல் "ஆதியிலே" என்னும் சொல், ஆதியாகமம் 1:1இல் உள்ளதுபோல ஆரம்பத்தை அல்ல, அந்த ஆரம்பத்திற்கும் அப்பால்,

---

[14] A.G.Fruchtenbaum, *Genesis: Ariel's Bible Commentary*, p. 32.

[15] J.S.Feinberg, *No One Like Him: The Doctrine of God*, p. 556.

[16] A.H.Strong, *Systematic Theology*, pp. 372-373.

[17] திருவிவிலியத்திலம், ராஜரீகம் மொழிபெயர்ப்பிலும் இவ்வாறு உள்ளது.

[18] J.S.Feinberg, *No One Like Him: The Doctrine of God*, pp. 556-557.

[19] D.T.Tsumura, *The Earth and the Waters in Genesis 1 and 2: A Linguistic Investigation*, pp. 33-34.

[20] D.F.Kelly, *Genesis 1:1-2:4 in the Light of Changing Scientific Paradigms*, p. 76.

[21] இதைப்பற்றிய முழுமையான விளக்கத்திற்கு எனது "இயேசுகிறிஸ்து இறைவனா?" என்னும் நூலையும், "யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்" என்னும் நூலின் ஐந்தாம், ஆறாம், ஏழாம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

“எவ்வித ஆரம்பங்களும் அற்ற நித்தியத்தையே” குறிக்கின்றது.[22] அதாவது, “ஆதியிலே” என்னும் சொல் ஆதியாகமம் 1:1ஐ நமக்கு நினைவூட்டினாலும், இது சிருஷ்டிப்பை அல்ல, அதற்கும் முன்பு உள்ள நிலையையே சுட்டிக்காட்டுகிறது.[23] ஏனெனில், அதியாகமம் 1:1இல் சிருஷ்டிப்புக்கும் முன்பே தேவன் இருந்ததுபோலவே இயேசுகிறிஸ்துவும் இருந்துள்ளார் என்பதையே யோவான் 1:1 அறியத்தருகின்றது.[24] இதனால்தான், இவ்வசனத்தில் “இருந்தது” என்னும் சொல் இலக்கண ரீதியாக, எப்பொழுதும் இருப்பதைக் குறிப்பிடும் விதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, “ஆதியிலே வார்த்தை இருந்தது” என்னும் வாக்கியம், இயேசுகிறிஸ்து இல்லாத காலம் என்று ஒரு காலமும் இல்லை. அவர் எப்பொழுதும் இருப்பவர் என்பதையே அறியத்தருகின்றது.[25]

யோவான் 1:1இல் “ஆதியிலே” என்பதற்கு உபயோகிக்கப்பட்ட “அர்க்கே” (*arche*) என்னும் கிரேக்கச் சொல்லே 1யோவான் 1:1இலும் இருந்தாலும், இவ்வசனத்தில் இச்சொல் “ஆதிமுதல்” என்று, குறிப்பிட்ட காலத்தின் ஆரம்பத்தை அறியத்தரும் விதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும், யோவான் 6:64, 15:27 என்னும் வசனங்களில் இச்சொல் இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக ஊழியத்தின் ஆரம்பத்தைக் குறிப்பதினால்,[26] 1யோவான் 1:1இலும் இச்சொல் இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக ஊழியத்தின் ஆரம்பத்தையே குறிப்பதாகப் பொதுவாகக் கருதப்படுகின்றது.[27] ஆனால், சிலர் இவ்வசனத்தில் இச்சொல் இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக வாழ்வின் ஆரம்பத்தைக் குறிப்பதாகக் கூறுகின்றனர்.[28] மேலும், சிலர் இதை ஆதியாகமம் 1:1உடன் தொடர்புபடுத்தி உலகத்தின் ஆரம்பத்தைக் குறிப்பதாகவும் விளக்குகின்றனர்.[29] ஆனால், 1யோவான் 1:1ல், இச்சொல் இலக்கண ரீதியாக யோவான் 1:1இல் உள்ளதைப் போலவே imperfect tenseஇல் இருப்பதினால், இவ்வசனத்தில் இச்சொல் இத்தகைய அர்த்தங்களுடன் உபயோகிக்கப்பட வில்லை.[30] மேலும், இரண்டாம் வசனத்தில் ஜீவவார்த்தை “பிதாவினிடத்தில் இருந்தது” என்றும் யோவான் குறிப்பிட்டுள்ளார்.[31] எனவே, பிதா நித்தியமானவர் என்பதினால், அவரிடத்தில் ஆதிமுதல் இருந்த ஜீவவார்த்தையாகிய இயேசுகிறிஸ்துவும் அவரைப்போல நித்தியமானவராக இருக்கின்றார். அதாவது, இயேசுகிறிஸ்து “உலகம் உருவாகுவதற்கும் முன்பே பிதாவினிடத்தில் இருந்தவர்” என்பதினால் (யோவா.17:5)[32] “ஆதிமுதல்” “பிதாவினிடத்தில் இருந்தவர்” என்னும்

---

[22] M.C.Tenney, *John: The Expositors Bible Commentary Volume 9*, p. 28; G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 102.

[23] R.A.Whitacre, *John: The IVP New Testament Commentary*, pp. 49-50. 102.

[24] C.G.Kruse, *John: Tyndale New Testament Commentary*, pp. 61-62; G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Volume 36*, p. 10.

[25] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 65; 114; C.S.Keener, *The Gospel of John: A Commentary Volume One*, p. 369.

[26] யோவான் 6:64இல், “விசுவாசியாதவர்கள் இன்னாரென்றும், தம்மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும் ஆதிமுதலாக இயேசு அறிந்திருந்தபடியால்” என்றும், யோவான் 15:27இல், நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார்.

[27] Z.C.Hodges, *1John: Bible Knowledge Commentary New Testament*, p. 883; J.M.Boice, *The Epistles of John: An Expositional Commentary*, p. 25; T.F.Johnson, *1,2,and 3 John: New International Commentary*, p. 26; J.C.Thomas, J.L.Houlden, *Johannine Epistles: Black’s NT Commentaries*, pp. 48-49; J.C.Thomas, *1,2,3 John: Pentecostal Commentary*, p. 62; D.Walls & M.Anders, *I, II, & III John: Holman New Testament Commentary*, p. 155; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1949; R.E.Brown, *The Epistles of John: The Anchor Bible Commentary*, p. 158; M.M.Culy, *1,2,3 John: A Handbook on the Greek Text*, p. 2.

[28] C.G.Kruse, *The Letters of John: The Pillar New Testament Commentary*, pp. 50-51; M.Cough & E.D.Hindson, *1,2,3 John & Jude: Twenty-First Century Biblical Commentary*, p. 14.

[29] G.M.Burge, *Letters of John: The NIV Application Commentary*, p. 53; C.Haas, M.de Jonge, and J.L.Swellengrebel, *A Handbook on the Letters of John*, p. 7; G.Strecker, *The Johannine Letters: Hermeneia Bible Commentary*, p. 9; A.E.Brooke, *A Critical and Exegetical Commentary on the Johannine Epistles*, p. 1; M.de Jonge, “An Analysis of 1John 1:1-4” p. 328.

[30] ஆதிமுதல் என்னும் சொல் “யோவானுடைய வாசகர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கிய காலத்தைக் குறிக்கின்றது” (B.E.Westcott, *The Epistles of St.John*, pp. 6-7) என்னும் சிலரது விளக்கம் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. இதைப்போலவே “இது அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்திலுள்ள சபையின் ஆரம்பத்தைக் குறிக்கின்றது” (R.R.Williams, *The Letters of John and James: Cambridge Bible Commentary*, p. 17) என்னும் விளக்கமும் அர்த்தமற்றமதாகவே உள்ளது.

[31] யோவானின் வாசகர்கள் அவர் எழுதிய சுவிசேஷத்தை வாசித்தவர்கள் என்பதினால், பிதா யார் என்பதைப்பற்றிய எவ்வித விளக்கத்தையும் யோவான் இவ்வசனத்தில் குறிப்பிடவில்லை.

[32] யோவான் 17:5இல்,” பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்” என்று பிதாவிடம் கேட்டுள்ளார்.

சொற்பிரயோகங்களை இயேசுகிறிஸ்துவின் ஊழிய ஆரம்பத்தையோ அல்லது உலகத்தின் ஆரம்பத்தையோ குறிப்பிடும் விதத்தில் யோவான் உபயோகித்துள்ளார் என்று எவ்விதத்திலும் கூறமுடியாது.[33] இதனால், இவ்வசனத்திலும் "அர்க்கே" என்னும் கிரேக்கச் சொல் யோவான் 1:1ஐப் போலவே "ஆரம்பங்கள் அற்ற நித்தியத்தையே" குறிக்கின்றது.[34] ஏனெனில், இயேசு கிறிஸ்து நித்தியமானவர் என்பதே அவரைப்பற்றி யோவான் நமக்கு அறியத்தரும் சத்தியமாகும். எனவே, ஆதியிலே என்னும் சொல்லுக்கு ஆதியாகமம் 1:1இல் இருக்கும் அர்த்தத்தை யோவான் 1:1இற்கும் 1யோவான் 1:1இற்கும் கொடுத்தால், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய தவறான ஒரு போதனையை உருவாக்குகிறவர்களாகவே இருப்போம். இதனால், ஒரு சொல்லுக்கு ஒரு வசனத்தில் இருக்கின்ற அர்த்தத்தையே எல்லா வசனங்களுக்கும் நாம் கொடுக்காமல், ஒவ்வொரு வசனத்திலும் அச்சொல் எத்தகைய அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

[33] R.W.Yarbrough, *1-3 John: Baker Exegetical Commentary on the New Testament*, p. 34; D.L.Akin, *1, 2, 3, John: The New American Commentary*, pp. 52-53; B.Witherington III, *Letters and Homilies for Hellenized Christians Volume 1*, p.442.

[34] I.H.Marshall, *The Epistles of John: New International Commentary on the NT*, p. 101; R.C.H.Lenski, *The Interpretation of the Three Epistles of John*, p. 371; D.L.Allen, *1-3 John: Preaching the Word Commentary*, p. 20.